THE SUDAR OLI
# சுடர் ஒளி
Registered as Newspaper
29.03.2020 ஞாயிற்றுக்கிழமை தொடர்புக்கு 077 361 5555

# யாழில் ஊரடங்கு மீண்டும் நீடிப்பு!
## இரண்டு கிராமங்கள் இரும்புப் பிடிக்குள்!

யாழ்ப்பாணம், மார்ச் 29
யாழ்ப்பாணம், கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம் மற்றும் கண்டி மாவட்டங்களில் நடைமுறையிலிருக்கும் ஊரடங்குச் சட்டம் மறு அறிவித்தல் வரை தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும்

2

# இலங்கையில் கொரோனா 115

- இன்றும் இருவர் அடையாளம்
- 8 பேர் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில்

கொழும்பு,மார்ச் 29
இலங்கையில் இன்று காலை இருவர் உட்பட இதுவரை 115 பேர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. இவர்களில் நேற்று ஒருவர் உயிரிழந்துள்ள நிலையிலும், 10 பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். ஏனைய 104 பேரும் வைத்திய

2

# மூடப்பட்டது அருணோதய மாவத்தை

கொழும்பு, மார்ச் 29
கொழும்பு, ராஜகிரிய, ஒபேசேகரபுர அருணோதய மாவத்தை கொரோனா தொற்று அச்சத்தால் இன்று தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. அந்த வீதியில் வசிக்கும் சிறுவர்கள் இருவர் உட்பட ஆறு பேருக்குக் கொரோனா தொற்று அறிகுறிகள் காணப்பட்டதை அடுத்தே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ)

# பணிப்பெண்ணுக்கு கொரோனா தொற்று

கொழும்பு, மார்ச் 29
சிறிலங்கன் விமான சேவையின் விமானப் பணிப்பெண் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றால் பீடிக்கப்பட்டுள்ளாரென ஐ டி எச் மருத்துவமனை உறுதிப்படுத்தியுள்ளது. இரண்டு தினங்களுக்கு முன்னர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்த அவருக்கு வைரஸ் தொற்றியிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஒ,5)

# புலம்பெயர்ந்தோரில் 17 ஆயிரம் பேர் பதிவு

கொழும்பு, மார்ச் 29
வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் தம்மை பதிவு செய்து கொள்ள வேண்டும் என இலங்கையின் வெளிவிவகார அமைச்சினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளை அடுத்து, நேற்றுமுன்தினம் பகல்வரை 17 ஆயிரம் பேர் தம்மைப் பதிவுசெய்து கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதில் 6773 பேர் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்தும், ஐரோப்பாவில் இருந்து 1892 பேரும், தென்னாசிய நாடுகளில் இருந்து 1028 பேரும், அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இருந்து ஏனையோருமாக 17 ஆயிரம் பேர்

2

# பட்டதாரிகள் கொரோனா தடுப்பில்:
## சட்டவிரோத நடவடிக்கை!
### தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 29
பட்டதாரிகளை அரச சேவையில் இணைத்துக் கொள்வதற்காக பயிலுநர்களாக ஆள் சேர்ப்புச் செய்யும் நடவடிக்கைகளை மே மாதம் 3ஆம் திகதி வரையில் இடைநிறுத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழு கடந்த 4ஆம் திகதி அறிவித்திருந்த நிலையில், அதனை மீறி அவர்களை இன்றைய தினம் கொரோனா தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

2

# ஊரடங்கை மீறிய மூவருக்கு பிணை

கொடிகாமம், மார்ச் 29
ஊரடங்கு நேரத்தில் நடமாடியதாகக் கைது செய்யப்பட்ட சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் மற்றும் அவரது ஆதரவாளர்கள் இருவரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஊரடங்கு வேளை

2

# போதனாவில் சேர்க்கப்பட்டோருக்கு கொரோனா இல்லை

யாழ்ப்பாணம், மார்ச் 29
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்றுச் சேர்க்கப்பட்ட இருவருக்கும் கொரோனா தொற்று இல்லை என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார். கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேசத்திலிருந்தும், ஏழாலையி

2

# கொரோனா நோயாளியின் உடல் இன்று எரிப்பு

கொழும்பு,மார்ச் 29
இலங்கையில் கொரோனா நோய் தொற்றின் காரணமாக உயிரிழந்த முதலாவது நபரின் உடல், அரச செலவில் இன்று தகனம் செய்யப்பட்டது.

2





## கொரோனாவால் வெளிநாட்டில்
# இலங்கையர் மூவர் இரு நாடுகளில் சாவு

கொழும்பு, மார்ச் 29
கொரோனா தொற்றால் இலங்கையர் மூவர் வெளிநாடுகளில் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. பிரிட்டனில் இருவரும் சுவிட்சர்லாந்தில் ஒருவருமாக மூவர் உயிரிழந்துள்ளனர்.
அவர்களில் ஒருவர் பிரிட்டனில் பணியாற்றி ஓய்வுபெற்ற இலங்கை மருத்துவர். மற்றையவர் பிரிட்டனில் தற்போது வசிப்பவரான,மஹரகம பகுதியைச் சேர்ந்த 55 வயதான லக்ருணறதெஷான் விஜேரத்ன என்று தெரிவிக்கப்பட்டது. இவர் லண்டனின் பெல்தம் பகுதியில் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. அவர் சில நாள்களாக மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் கண்காணிக்கப்பட்டு வந்த நிலை

2

சுட்டெரிக்கும் உண்மைகளை சுமந்து வரும் மாலை இதழ்

## கொரோனா தடுப்பில்...

அரசின் இந்த நடவடிக்கை சட்ட விரோதமானது என்று தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜுவன் ஹுல் 'சுடர் ஒளி'க்கு இன்று மதியம் தெரிவித்தார்.

தொழில்வாய்ப்பற்ற பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பட்டங்களை பெற்றுள்ளவர்களுக்கு தொழில் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் ஜனாதிபதி கோத்தாபயவால் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. கடந்த பெப்ரவரி மாதம் 29ஆம் திகதி இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டன. மார்ச் 2ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. அதன் பின்னரும் இவ்வாறு உள்ளீர்ப்புச் செய்யப்பட்டவர்களுக்கான கடிதங்கள் அனுப்பப்பட்டு அவர்கள் பிரதேச செயலகங்களில் இணைக்கப்பட்டனர்.

இந்த விடயம் தேர்தல்கள் ஆணைக்குழுவின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. இதனையடுத்து கடந்த 4ஆம் திகதி தேர்தல்கள் ஆணைக்குழு இந்த நியமனங்களை மே மாதம் 3ஆம் திகதி வரையில் உடனடியாக இடைநிறுத்துமாறு பணித்திருந்தது. நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் நிறைவடைந்த பின்னர் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது. இந்த நிலையில் அரசு, அந்தப் பட்டதாரிகளுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படும் என்று அறிவித்தது. அத்துடன் அவர்களை ஒவ்வொரு சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையிலும் எதிர்வரும் முதலாம் திகதி முதல் இணைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக இன்றைய தினம் நியமனக் கடிதம் கிடைக்கப் பெற்ற அனைத்துப் பட்டதாரிகளையும் அவர்களுக்குரிய பிரதேச செயலகங்களுக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அவர்களின் ஆவணங்கள் மற்றும் வங்கிப் புத்தகப் பிரதி என்பவற்றைக் கொண்டு வருமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜுவன் ஹுலிடம் தொடர்புகொண்டு கேட்டபோது, தற்போதும் தேர்தல் சட்டம்தான் நடைமுறையில் உள்ளது. தேர்தல்கள் ஆணைக்குழு நியமன நடவடிக்கைகளை இடைநிறுத்துமாறு விடுத்த கடிதம் வலுவில்தான் உள்ளது. அதனை மீறிச் செயற்படுவது சட்டவிரோதமானது, என்று பதிலளித்தார். (ஓ,5,105)

## யாழில் ஊரங்கு...

என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் நாளை திங்கட்கிழமை காலை 6 மணிக்குத் தளர்த்தப்படும் ஊரடங்குச் சட்டம் பிற்பகல் 2 மணிக்கு மீண்டும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய பணிகளுக்காக மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்து முழுமையாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகளை வினைத்திறனாகப் பேணும் வகையில் நடைமுறையில் உள்ள முறைமைகளை மீறுபவர்களுக்கு எதிராகச் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும் எனவும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, களுத்துறை மாவட்டத்தில் அடுளுகம மற்றும் கண்டி மாவட்டத்தில் அக்குரணை ஆகிய கிராமங்கள் முழுமையாகத் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. எவரும் இந்தக் கிராமங்களுக்கு உள்வருவதோ அல்லது வெளியேறுவதோ முழுமையாகத் தடைசெய்யப்பட்டுள்ளது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள விசேட அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ,5,22)

## இலங்கையில் கொரோனா

சாலைகளில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொழும்பு அங்கொடை தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையில் 93 பேரும், வெலிகந்தை ஆதார வைத்தியசாலையில் 10 பேரும், முல்லேரியா ஆதார வைத்திய சாலையில் ஒருவரும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொழும்பு அங்கொடை தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவோரில் 8 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. அவர்கள் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுவரை கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட மாவட்டங்களின் எண்ணிக்கையும் 13 ஆக உயர்ந்துள்ளது என்று சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

தற்போது சிகிச்சை பெறும் கொரோனா தொற்றாளர்களில், அதிகமானோர் மேல் மாகாணத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அந்த மாகாணத்தில் அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்களின் எண்ணிக்கை 50 ஐத் தாண்டியுள்ளது. இதில் 25 பேர் வரையிலானோர் கொழும்பு மாவட்டத்துக்குள் மட்டும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம், இரத்தினபுரி, குருநாகல், காலி, கேகாலை, மட்டக்களப்பு, பதுளை, யாழ்ப்பாணம், மாத்தறை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் 21 வைத்தியசாலைகளில் 5 வெளிநாட்டவர்கள் உட்பட 117 பேர் கொரோனாத் தொற்றுச் சந்தேகத்தில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தநிலையில் அடுத்து வரும் இரு வாரங்களில் கொரோனா தொற்றுப் பரவும் வேகம் இலங்கைக்குள் அதிகரிக்கலாம் என்று சந்தேகம் நிலவுகிறது. ஊரடங்குச் சட்டக் காலப்பகுதியில் அனைவரையும் தத்தமது வீடுகளுக்குள்ளேயே தனிமைப்பட்டிருக்க அரசு ஆலோசனை வழங்கியுள்ளது. (க-22)

## புலம்பெயர்ந்தோரில்...

தம்மை பதிவு செய்துகொண்டுள்ளனர். வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் தம்மை பதிவு செய்து கொள்வதற்காக இலங்கையின் வெளிவிவகார அமைச்சு www.contactsrilanka.mfa.gov.lk என்ற இணையத்தளத்தை அறிமுகம் செய்துள்ளது. இந்தத் தரவுகளைக் கொண்டு எதிர்காலத்தில் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க முடியும் என்று இலங்கையின் வெளிவிவகார அமைச்சு நம்பிக்கை வெளியிட்டுள்ளது. (ந-114)

## போதனாவில்...

லிருந்தும் நேற்று இருவர் கொரோனா தொற்றுச் சந்தேகத்தில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தனர். அவர்கள் இருவரினதும் மாதிரிகள் எடுத்து சோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. அவர்களுக்கு கொரோனா தொற்று இல்லை என்று பரிசோதனை முடிவுகளிலிருந்து தெரியவந்துள்ளது. (ஓ,5,20)

## கொரோனா நோயாளியின்...

இலங்கையில் 115 பேர் இதுவரை உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், 117 பேர் சந்தேகத்தின் அடிப்படையில் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் 10 பேர் தொற்றிலிருந்து குணமாகிச் சென்றுள்ளனர்.

நேற்று பிற்பகல் இலங்கையின் முதலாவது கொரோனா உயிரிழப்பு பதிவாகியது. உயிரிழந்தவர் மாரவில பகுதியைச் சேர்ந்த 60 வயதுடைய தர்மசிறி ஜனானந்த என்ற சுற்றுலா வழிகாட்டியாவார். குறித்த நபர் ஏற்கனவே சிறுநீரக மாற்றுச்சிகிச்சை செய்திருந்ததுடன், நீரிழிவு மற்றும் உயர்குருதியமுக்கம் போன்ற நோய்களுக்குச் சிகிச்சை பெற்று வந்துள்ளார். உயிரிழந்த ஜனானந்தவின் உடல் குடும்பத்திடம் ஒப்படைக்கப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்பட்ட நிலையில், இன்று அரச செலவில் கொட்டிக்காவத்த மின்சார மயானத்தில் கடுமையான பாதுகாப்பின் மத்தியில், சர்வதேச சுகாதார விவரக்குறிப்புகளின் கீழ் தகனம் செய்யப்பட்டது. (க-114)

## இலங்கையர் மூவர்...

யிலேயே உயிரிழந்துள்ளார். மற்றையவர் சுவிட்சர்லாந்தில் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் புங்குடுதீவு பகுதியிலிருந்து புலம்பெயர்ந்து சுவிட்சர்லாந்தில் வசித்த 59 வயதானவரே கொரோனா வைரஸ் காரணமாக அங்கு உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான 3 ஆவது நபரின் இறப்பு இது என்று தெரிவிக்கப்பட்டது. (த)

## ஊரடங்கை மீறிய...

யில் கொடிகாமம் கச்சாய் பகுதியில் உணவு தேவையுடைய குடும்பங்களுக்கு உலர் உணவு பொருள்கள் வழங்கச் சென்றபோது, இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சாவகச்சேரி பொலிஸாரால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் முடிவடைந்த நிலையில், ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த போது, நடமாடியதால் இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று கொடிகாமம் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது.

விசாரணையின் பின்னர் பொலிஸ் பிணையில் நகரசபை உறுப்பினரும், ஆதரவாளர்கள் இருவரும் விடுவிக்கப்பட்டனர். இது தொடர்பான வழக்கு மே மாதம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (க-159)

# கொரோனா தொற்றாளர்களுக்கு 'ரோபோ'க்கள் மூலம் சிகிச்சை

## திட்டம் வெற்றி என்று அரசு தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 29

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் நோயாளர்களுக்கு 'ரோபோ'க்களின் உதவியுடன் சிகிச்சை அளிக்கும் இலங்கை அரசின் திட்டம் வெற்றியளித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. மருத்துவர்களுக்கும், நோயாளர்களுக்கும் இடையில் ரோபோக்களை கொண்டு பரீட்சார்த்த நடவடிக்கை ஹோமாகம மருத்துவமனையில் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளது. இலங்கையின் 'அட்லஸ்' பொறியியலாளர்கள் நிறுவனத்தினால் வரையறைசெய்யப்பட்ட இந்த ரோபோக்களின் செயற்பாடுகளை சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் தலைமையிலான குழு கண்காணித்து வருகின்றது. நோயாளர்களுக்கு மருந்து வகைகளை கொண்டு செல்லுதல், உணவுகளை கொண்டு செல்லுதல், சிகிச்சைகளுக்கு உதவி அளித்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளை குறித்த ரோபோக்கள் முன்னெடுத்துள்ளன. இதன்படி, ரோபோக்களை கொண்டு முன்னெடுக்கப்பட்ட பரீட்சார்த்த நடவடிக்கை வெற்றியளித்துள்ளதாகவும் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார். எதிர்வரும் காலங்களில் 25 ரோபோக்களை இந்த நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்த எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தனது டுவிட்டர் தளத்தில் இது தொடர்பிலான வீடியோ ஒன்றை இன்று வெளியிட்டுள்ளார். (த)

# மார்பு வலியோடு அறிகுறிகள் உடனே மருத்துவமனை செல்க

## சுகாதார அமைச்சு அறிவுறுத்து

கொடிகாமம், மார்ச் 29

'கொரோனா' தொற்றின் திடீர் பெருக்கத்தின்போது மாரடைப்பு நோயின் அறிகுறியான மார்பு வலி உட்பட பின்வரும் அறிகுறிகள் இருப்பின் மருத்துவ உதவியை நாடுமாறு சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சு அறிவித்துள்ளது.

கடுமையான மார்பு வலி, மார்பு இறுக்கப்படுவது போன்ற உணர்வு, நெருக்குவது போன்ற வலி, மார்பின் கனத் தன்மை, மார்பில் கடுமையான அசௌக ரியம் போன்ற அறிகுறி கள் பத்து தொடக்கம் இருபது நிமிடங்கள் தொடர்ச்சி யாகக் காணப்படுமாயின் இவை மாரடைப்பைக் குறிக்க லாம். மேலே உள்ள அறிகுறிகளில் ஏதேனும் ஒன்றை நீங்கள் உணர்ந் தால் 'அஸ்பிரின்' மாத்திரை ஒன்றைச் சாப்பிடுங்கள். அருகில் உள்ள மருத்துவமனைக்கு விரைந்து செல்லுங்கள். அல்லது அவசர அம்பு லன்ஸ்க்கு அழைப்பை ஏற்படுத்தி 1990 ஐ அழையுங்கள்.

உங்களுக்கு காய்ச்சல் அல்லது தொண்டை வலி இருந்தால் தயவு செய்து மருத்துவரிடம் தெரிவிக்கவும் என்று சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சு அறிவித்துள் ளது. (த-159)





# 50 குடும்பங்களுக்கு கோதுமை மா பொதிகள்

முல்லைத்தீவு,மார்ச் 29

முல்லைத்தீவு மாவட்ட விஸ்வமடு, தேராவில், மற்றும் மாணிக்கபுரம் ஆகிய கிராமங்களில் பொருளாதார நிலையில் பின் தங்கிய குடும்பங்க ளுக்கு கோதுமை மா பொதிகள் வழங்கப்பட்டன.

தெரிவு செய்யப்பட்ட 50 குடும்பங்கள் ஒவ்வொன் றுக்கும் தலா 5 கிலோ கோதுமை மா பொதிகள் வழங்கப்பட்டன. ஸ்ரீ சபாரத்தினம் அறக்கட்ட ளையின் ஊடாக ஜேர்மனியில் வசிக்கும் குஜோக்ச னின் நிதி அனுசரணையில் இவ்வுதவிகள் வழங்கப் பட்டன. (ஐ-46)

# கடன்களுக்குச் சலுகை : ஆசிரியர்களுக்கு வழங்குக

## ஆசிரியர் சேவைச் சங்கம் கோரிக்கை

கொடிகாமம், மார்ச் 29

நாட்டில் தற்போது நிலவும் அசாதாரண நிலைமையில் பாதிக்கப்பட்டிருக்கும் கல்விக் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களின் கடன்க ளுக்குச் சலுகைகளைப் பெற்றுத் தரும்படி இலங்கை ஆசிரியர் சேவை சங்கம், கூட்டு றவு அபிவிருத்தி ஆணையாளருக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது

அந்தக் கடிதத்தில் மேலும் உள்ளதாவது;

கல்விக் கூட்டுறவுச் சங்கத்தில் அதிகளவான ஆசிரியர்கள் உட்பட அங்கத்தவர்களின் கோரிக்கைக்கு இணங்க நிதி நிறுவனங்களில் பெற்றுக்கொண்ட கடன்களுக்கு மாதத்துக் கான கடன் தவணையைச் செலுத்துவதற்கு நாட்டின் நிலைமையைக் கருத்தில் கொண்டு தற்காலிகமாக இடை நிறுத்துவதற்கு அரசு எடுத்துள்ள தீர்மானம் தொடர்பாக உங்கள் கவனத்துக்கு கொண்டு வருகின்றோம்.

இந்தச் சங்கத்தின் கடன் திட்டத்தின் கீழ் கடன் பெற்றுக்கொண்ட அங்கத்தவர்க ளுக்கு நாட்டின் தற்போதைய நிலைமையில் கடனுக்கான மாதத் தவணையைச் செலுத்த முடியாத நிலைமை காணப்படுவதால், நாட்டில் தற்போது நிலவும் சூழ்நிலை மாற் றம் அடையும் வரை கடனுக்கான மாதத் தவணையை அறவீடு செய்வதை இடை நிறுத்துவதற்கு சங்கத்தின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கும்படி இதன் மூலம் கேட்டுக்கொள்கின்றோம். மேலும் சங்கத் தில் கடன் பெறுவதற்கு எதிர்பார்த்திருக்கும் அங்கத்தவர்களுக்குக் கடன்களை மிக விரை வாக வழங்குவது மிக முக்கியமானதாகும். எனவே இதற்கான பொறிமுறையை ஏற்ப டுத்தி அதிகாரிகளுக்குத் தகுந்த அறிவுறுத் தல்களை வழங்க வேண்டுமென்று கேட் டுக்கொள்கின்றோம் என்றுள்ளது.

கடிதத்தின் பிரதிகள் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் சங்கத்தின் தலைவர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று சங்கத் தின் உப தலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார். (ஐ-159)

# நீரில் மூழ்கி ஒருவர் சாவு

கொழும்பு,மார்ச் 29

ஊரடங்கு நேரத்தில் ஆற்றில் நீராடச் சென்றவேளை நீரில் மூழ்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நெதுகல்பிட்டிய - பல்லஹேள தோட்டத்தைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளி சிவா (வயது60) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார். (ஐ)

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு–

# நிவாரண உதவிகளை வழங்கி வீடுகளில் இருக்கச் செய்யுங்கள்

## சுரேஸ் பிரேமச்சந்திரன் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச் 29

அன்றாட வாழ்வுக்கு வழிதேடி, வீடுகளை விட்டு வெளியில் வந்து வேலைதேடும் மக்களை ஊரடங்கு சட்டத்தை மீறினர் என்று கூறி அடித்துத் துன்புறுத்தி கைதுசெய்வதைவிட அவர்களுக்கு உரிய நிவாரண உதவிகளை வழங்கி வீடுகளில் இருக்கச் செய்யுங்கள்.

இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் சுரேஸ் பிரேமச்சந் திரன் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது;



"கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக நாடுமுழுவதும் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ளது.

அன்றாடம் கூலித்தொழில் செய்வோருக்கு எந்தவித வேலைவாய்ப்புகளும் அற்ற சூழல் நிலவுகிறது. இதனால் முழு இலங்கையிலும் லட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை யில், ஆயிரக் கணக்கான குடும் பங்கள் ஒரு வேளை உண வுக்கே அல்லலு றும் நிலை ஏற்பட் டுள்ளது. எனவே பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்கி அவர்களும் வீடுகளிலிருந்த வாறே பொருள்களைக் கொள்வனவு செய்யும் சூழலை ஏற்படுத்துவதே ஒரு அரசாங்கத்தினது தலையாய கடமையாகும். என்றுள்ளது. (ஐ-20)

### கொரோனா அச்சம்;
# யாழில் 110 கைதிகள் பிணையில் விடுதலை

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ்பாணம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த கைதிகளில் 110 பேர் கடந்த சில தினங்களில் பிணையில் வெளியில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக நாடளாவிய ரீதியில் சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளை விடுதலை செய்து சிறையில் உள்ள நெருக்கடியை குறைப்பதற்குச் சிறைச்சாலைகள் திணைக்களம் ஜனாதிபதி ஊடாக நடவடிக்கை எடுத்து வருகின்றது. அதனடிப்படையில் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் கடந்த சில தினங்களில் மட்டும் 110 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறு குற்றங்கள் புரிந்த, மற்றும், நீதிமன்றங்களால் பிணை வழங்கப்பட்டு பிணையைப் பூர்த்தி செய்ய முடியாது சிறையில் அடைக்கப்பட்டுள்ள கைதிகளே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும், தனி நபர் பிணையில் (சுய) செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விடுதலை செய்யப்பட்ட அவர்கள் வழக்குத் தவணையின்போது நீதிமன்றத்தில் முன்னிலையாக வேண்டும் என்று கட்டளையிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் உள்ள மேலும் பல கைதிகளை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ப-111)

# 3 நாள்களுக்கு நடமாட முடியாது

### பொலிஸார் திட்டவட்டம்

கொடிகாமம், மார்ச் 29

தென்மராட்சியில் சமுர்த்திக் கொடுப்பனவு வழங்கல் உட்பட எந்தவொரு நடவடிக்கையையும் 3 நாள்களுக்கு மேற்கொள்ள முடியாது என்று தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் நேற்று நடந்த கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

கொரோனா வைரஸ் தடுப்பு சம்பந்தமாகவும் ஊரடங்கு வேளையில் நடைமுறைப்படுத்தப்படும் சேவைகள், நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல் தென்மராட்சிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் தலைமையில் நேற்று மதியம் நடைபெற்றது.

சாவகச்சேரிப் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர், சாவகச்சேரி நகரசபை தவிசாளர், சாவகச்சேரி பிரதேச சபை உபதவிசாளர், தென்மராட்சி பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரிகள், இராணுவ பொறுப்பதிகாரிகள் இதில் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது, "நடமாடும் சேவைகள் நடத்துவதோடு 78 ஆயிரம் சமுர்த்தி குடும்பங்களுக்கான நிவாரணம் வழங்க வேண்டும். இரண்டாயிரத்து எண்ணூறு பட்டதாரி பயிலுநர்களையும் சேவையில் ஈடுபடுத்த வேண்டும் "என்று பிரதேச செயலரால் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது, கொரோனா தொற்று அதிகமாக இருப்பதால் எதிர்வரும் மூன்று நாள்களுக்கு யாரும் வீட்டை விட்டு வெளியே நடமாட முடியாது. அனுமதிப் பத்திரமும் வழங்க முடியாது. எந்த விதமான நடமாடும் சேவைகளும் நடத்தப்படமுடியாது.

செவ்வாய்க்கிழமை வரை இரண்டாயிரத்து எண்ணூறு பட்டதாரிகளையும் சேவையில் ஈடுபடுத்த முடியாது. இருபது பேருடன் திருமண நிகழ்வு செய்வதாக கூறிவிட்டு இருநூறு பேருடன் திருமணத்தை நடத்துகின்றனர். ஊரடங்கு நேரத்தில் நடமாடும் அனைவரும் தோட்டத்துக்குச் செல்வதாகப் பொய் கூறிவிட்டு கூட்டமாக நிற்கின்றார்கள். எனவே எந்தக் காரணம் கொண்டும் செவ்வாய்க்கிழமை வரை எந்த விதமான நடமாடும் சேவைகளும் நடத்த அனுமதி வழங்க முடியாது. வீட்டைவிட்டு யாரும் வெளியே செல்ல முடியாது என்று இராணுவத்தினரும், பொலிஸ்மா அதிபரின் அறிவித்தலை மீறமுடியாது என்று பொலிஸாரும் தெரிவித்தனர். செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் மாற்று நடவடிக்கை ஏதாவது வந்தால் அறிவிப்பதாகவும் தெரிவித்தனர். (த-159)

# காட்டுக்குள் ஒளிந்த வெளிநாட்டு தம்பதி

### பொலிஸாரால் மீட்பு

பண்டாரவளை, மார்ச் 29

பண்டாரவளை, எல்ல பிரதேசத்தில் ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த நிலையில் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட வெளிநாட்டு தம்பதி ஒன்று கடந்த 4 நாட்களாக காட்டில் கூடாரமடித்து தங்கியிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டதாக எல்ல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக வெளிநாட்டவர்களுக்கு இலங்கை ஹோட்டல்களில் தங்குவதற்கு, அனுமதி மறுக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறான சூழ்நிலையில் குறித்த வெளிநாட்டுத் தம்பதி தங்க இடம் இல்லாமல் போயுள்ளது. இதனால் காட்டுக்குள் எவருக்கும் தெரியாத வகையில் சிறிய கூடாரம் ஒன்றை அமைத்து வசித்து வந்தனர். தமக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அவர்களை மீட்ட பொலிஸார் அவர்கள் தங்குவதற்கு ஏற்ற இடம் ஒன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்தனர். (ந)



# தாவடியில் உதவி

யாழ்ப்பாணம்,மார்ச் 29

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக தடுத்து வைக்கப்பட்ட தாவடிப் பகுதியைச் சேர்ந்த 260 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் இன்று வழங்கப்பட்டன.

விஜிதா மில் உரிமையாளர், இராணுவத்தினர், ஜே/193 மற்றும் ஜே/192 கிராம அலுவலர்கள் உட்பட நலன்விரும்பிகள் ஆகியோரின் நிதி உதவியுடன் இந்தப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ஐ-106)

# இந்தியாவால் வந்தோர் உடன் தொடர்பு கொள்க

## 021 221 7278 என்ற இலக்கத்துக்கு!

யாழ்ப்பாணம்,மார்ச் 29

இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய, வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களை உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் நேற்று புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா தொற்றுக்குள்ளானவர்களில் நான்கு பேர் இந்தியாவிலிருந்து அண்மைக் காலத்தில் நாட்டுக்குள் வந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் இந்தக் காலப்பகுதியில் இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய அனைவரையும், உடனடியாக அடையாளம் காணுமாறு இலங்கையின் மத்திய சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

எனவே கடந்த 14ஆம் திகதி அல்லது அதன் பின்னர் இந்தியாவிலிருந்து வந்தவர்கள் அனைவரும் உடனடியாக 021 221 7278 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். இவ்வாறு நாடு திரும்பியுள்ளவர்கள் அனைவரும் உடனடியாக தம்மைத் தத்தமது வீடுகளிலேயே தனிமைப்படுத்திக்கொள்வதுடன், காய்ச்சல், தொண்டை நோ மற்றும் வரட்டு இருமல் போன்ற நோய் அறிகுறிகள் இருப்பின், அருகிலுள்ள அரச வைத்தியசாலையை அணுகுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்- என்றுள்ளது. (க)

## பெண்ணின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு, மார்ச் 29

பெண் ஒருவர் தூக்கில் தொங்கி தற்கொலை செய்து கொண்ட நிலையில் சடலமாக இன்று காலை மீட்கப்பட்டுள்ளார் என, மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர். மட்டக்களப்பு, சின்ன ஊறணிப்பகுதியில் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

சின்ன ஊறணி , பாடசாலை வீதியைச் சேர்ந்த, துவேந்திரன் துசாந்தினி ( வயது -25) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குறித்த பெண் 3 மாத கர்ப்பிணி எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

குடும்பத்தகராறு காரணமாகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது. (ந-114)

# அறா விலைக்கு கடல் உணவுகள்

### நியாய விலையில் விற்பனை செய்யக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச் 29

யாழ்ப்பாண மாவட்ட மீனவர்கள் பிடிக்கும் கடல் உணவுகளை நியாயமான விலையில், உள்ளூர் மக்களுக்கு வழங்குமாறு மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தினர் மீனவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் சம்மேளனத்தினர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்றுக் காரணமாக மக்கள் பல வகையிலும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஊரடங்கு நேரத்தில் மீனவர்கள் கடலுக்குச் செல்லலாம் என்று அரசு அறிவித்துள்ளது.

ஆனாலும் கடலுக்குச் செல்வோர் எண்ணிக்கை குறைந்துள்ளது. அதிக நேரம் கடலில் மீன்பிடிக்காகச் செலவிடும் நேரமும் குறைந்துள்ளது. இந்த நிலையில் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையிலும் , மக்களின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையிலும் கடல் உணவுகளை விற்பனை செய்ய வேண்டும்.

ஏற்றுமதி செய்யப்படும் நண்டு, இறால் ஆகியவை மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. ஒரு கிலோ கிராம் இறால் சுமார் 700 ரூபா முதல் விற்பனை செய்யப்பட்டது. தற்போது 550 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. ஒரு கிலோ கிராம் நண்டு 850 ரூபா முதல் 1200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது ஒரு கிலோ கிராம் நண்டு 200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

இவற்றை உள்ளூரில் விற்பனை செய்தால், மக்களும் நன்மை அடைவர். மீனவர்களுக்கும் இலாபம் கிடைக்கும். நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலையை அடுத்து ஊரடங்கு அமுலில் உள்ளது.

இந்த நிலையில் மக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்கள், மரக்கறிகள் வீடுகளுக்குக் கொண்டு சென்று விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது-என்றுள்ளனர்.(க-7)

கொரோனா செய்த சதி

# மகளின் மரணச் சடங்கில் பங்கேற்க முடியாத தந்தை

கொழும்பு,மார்ச் 29

கொரோனா வைரஸ் அச்சுறுத்ததால், தனது மகளின் மரணச்சடங்கில் பங்கேற்க முடியாத நிலைமைக்கு தந்தையொருவர் தள்ளப்பட்டுள்ளார். இந்தப் பெருந்துயர் சம்பவமொன்று கொழும்பு மாவட்டத்திலுள்ள அவிசாவளைப் பகுதியில் நடந்துள்ளது.

அவிசாவளைப் பகுதியைச் சேர்ந்த நிரோஷ் மஞ்சுல, சுற்றுலாப் பயணிகளுக்கான சாரதியாகப் பணியாற்றி வருகின்றார்.

இலங்கையைச் சேர்ந்த சுற்றுலா வழிகாட்டியொருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டதையடுத்து, சுற்றுலாத்துறையுடன் நேரடியாகத் தொடர்புபட்டவர்களை 14 நாள்களுக்குத் தனிமையில் இருக்குமாறு அரசாங்கம் அறிவுரை வழங்கியிருந்தது.

இதன்படி மஞ்சுலவும் சுகாதார அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கமைய, தனது மற்றுமொரு வீட்டில் கடந்த 24ஆம் திகதி முதல் தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்டார். எனினும் கடந்த வெள்ளிக்கிழமை திடீர் சுகவீனம் காரணமாக அவரது 10 வயதான மூத்த மகள் உயிரிழந்துள்ளார்.

அவருக்கான இறுதிக் கிரியைகளில் தந்தை கலந்து கொள்ளவில்லை. சுய தனிமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாலேயே இந்த நிலைமை ஏற்பட்டது. “ நெருக்கடியான சூழ்நிலையில் அர்ப்பணிப்புடன் செயற்படும் வைத்தியர்களுக்காகவும், நாட்டுக்காகவும், மக்களின் நலன்கருதியுமே சுகாதார அதிகாரிகளின் அறிவுறுத்தலை பின்பற்றினேன்” என்று மஞ்சுல கண்ணீர் மல்கத் தெரிவித்தார். வைரஸ் தொற்றுக்கான அறிகுறிகள் தென்படாத போதிலும் பொறுப்புடனும், பொது நலன்கருதியும் செயற்பட்ட இவருக்கு சமூக வலைத்தளங்களில் பாராட்டுகள் குவிந்த வண்ணமுள்ளன. (க-44)



# 14 மீனவர்கள் முல்லையில் கைது

### 4,000 கிலோ மீன் பறிமுதல்

முல்லைத்தீவு, மார்ச் 29

தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட 14 மீனவர்கள் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர். 4 ஆயிரம் கிலோவுக்கு மேற்பட்ட மீன்கள் உள்ளிட்ட அவர்களுடைய 5 படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை, முல்லைத்தீவு, புதுமாத்தளன் கடற்பரப்பில் வைத்து அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று கடற்படை தெரிவித்தது.

ஐந்து டிங்கிரி படகுகள், ஒரு சட்டவிரோத வலை , 4 ஆயிரம் கிலோவுக்கும் மேற்பட்ட மீன்கள், ஒரு ஜீப், மற்றும் பிற மீன்பிடி உபகரணங்கள் மீனவர்களிடமிருந்து மீட்கப்பட்டன. கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் புதுமாத்தளன் பகுதியில் வசிப்பவர்கள் எனக் கூறப்படுகிறது. கைப்பற்றப்பட்ட உபகரணங்கள் முல்லைத்தீவு நீரியல் வளதிணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டது. (ப-7)

# மீன் வியாபாரிகளை துரத்திய பொலிஸார்

### பாசையூரில் சம்பவம்

யாழ்ப்பாணம்,மார்ச் 29

பாசையூரில் மீன் வியாபாரிகள் பலர் இன்று ஒன்று கூடியதால், அந்த இடத்துக்கு விரைந்த பொலிஸார் , அவ்வாறு ஒன்று கூடுவதைத் தடுத்ததுடன், கொரோனா வைரஸ் பற்றிய அறிவுறுத்தல்களையும் அவர்களுக்கு வழங்கினர்.

பாசையூரிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் கரை திரும்பியதும், மீன்களைக் கொள்வனவு செய்ய வியாபாரிகள் அந்த இடத்தில் இன்று குவிந்தனர்.

யாழ்ப்பாணத்தில் ஊரடங்குச் சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில், பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். வியாபாரிகள் மீன்களை விற்பனை செய்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதால், பாசையூரில் மீன்களைக் கொள்வனவு செய்ய வியாபாரிகள் உட்பட பொதுமக்களும் சென்றிருந்தனர்.

இவ்வாறு ஒன்றுகூடுவதால், கொரோனா தொற்று ஏற்படலாம் என்று மீனவர்களுக்கு யாழ்ப்பாணம் பொலிஸ் பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னான்டோ உள்ளிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள், அறிவுறுத்தல்களை வழங்கினர். வியாபாரிகளை அங்கிருந்து உடனடியாகச் செல்லுமாறும் பணித்தனர்.

பொதுமக்கள் தனி நபராகச் சென்று தேவைகளைப் பூர்த்தி செய்யுமாறும் பொலிஸார் வேண்டுகோள் விடுத்தனர். (க-106,111)

# தொற்றா நோய் உள்ளோர் மருத்துவமனைக்கு வராதீர்

## சுகாதார சேவைகள் திணைக்களம் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 29

நீரிழிவு, இதய நோய், உயர் குருதியமுக்கம், கொலஸ்ரோல் போன்ற தொற்றா நோய்கள் உள்ள நோயாளிகள் மருத்துவமனைகளுக்கு வருகை தரவேண்டாம் என்று சுகாதார அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

கொரோனா நோய் தொற்று அதிகமாகி வரும் கராணத்தால் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சு தெரிவித்துள்ளது. இது தொடர்பில் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிவுறுத்தலில், மேற்குறித்த நோயாளிகளுக்குக் காணப்படும் அதிக ஆபத்துக் காரணமாக நோயாளர்கள் கிளினிக்குகளுக்கு வரவேண்டாம். பதிலாக மருந்துகளைப் பெற்றுக்கொள்ள ஆரோக்கியமான பொறுப்புடைய ஒருவரை, சிகிச்சை நிலையத்துக்கு கிளினிக் புத்தகத்துடன் அனுப்பலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்த தேவையான சேவைகள் வழங்குவதற்கு அரச மருத்துவமனைகள் பிணி நிலைய நேர அட்டவணையின்படி செயற்பட்டு வருகின்றன. இரு மாதங்களுக்குத் தேவையான மருந்துகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

பிணி நிலையங்களுக்கு அவர்களால் வரமுடியாவிட்டால் ஏதேனுமொரு வார நாள்களில் அந்த மருந்துகளை வெளிநோயாளர்கள் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். பிணி நிலைய புத்தகப் பதிவுகள் அல்லது நோயறிதல் அட்டைகள், ஊரடங்கு நடைமுறையில் உள்ள போது அனுமதிப்பத்திரமாகப் பயன்படுத்தலாம் என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார். (த-114)

# 'கொரோனா' சந்தேகநபர்களை கண்டறிய 'செயலி' உருவாக்கம்

## பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 29

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் தலைமறைவாகியுள்ளவர்களைக் கண்டறியவும் அதன் மூலம் அவர்களைக் கைதுசெய்யவும் 'செயலி' ஒன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. எனவே அவர்கள் மறைந்திருந்து நாட்டையும் மக்களையும் ஆபத்தில் தள்ளாது தனிமைப்படுத்தலுக்கு ஒத்துழைக்கவேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலார் மேஜர் ஜெனரல் கமால் குணரட்ண வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சீனாவின் வுகான் மாநிலத்தில் உருவெடுத்த கொரோனா வைரஸ் முழு உலகையும் அழித்து வருகின்றது. பெரும்பாலான நாடுகளில் உயிரிழப்புகள் மிக மோசமாக இடம்பெறுகின்றன. இந்த அழிவிலிருந்து நாட்டு மக்களை பாதுகாக்க வேண்டியது எமது கடமை. இதுவரையில் இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளான 113 நோயாளிகள் கண்டறியப்பட்டுள்ளனர்.

237 பேர் வரையில் சந்தேகத்தில் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். இலங்கையில் கொரோனா வைரஸை பரவ விடக்கூடாது என்பதில் இரவு-பகல் பாராது சுகாதாரப் பிரிவினரும் பொலிஸார் உட்பட முப்படையினரும் செயற்பட்டு வருகின்றனர். இந்தத் தருணத்தில் பொதுமக்களின் ஒத்துழைப்புகள் மிக முக்கியமானவை.

தனக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பதாக சந்தேகம் ஏற்பட்டால் உடனே சுகாதார துறைக்கோ அல்லது அருகில் உள்ள பொலிஸாருக்கோ அறிவித்து தனிமைப்படுத்தலில் ஈடுபடுங்கள். கொரோனா தொற்றுள்ளவர்கள் என்று சந்தேகிப்பவர்களைக் கண்காணிக்கவும் அவர்களை தனிமைப்படுத்தலுக்கும் உட்படுத்தவும் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைளை எடுத்துள்ளது. தேசிய புலனாய்வுப் பிரிவு இதற்காகச் செயலி ஒன்றையும் உருவாக்கியுள்ளது. இலங்கை வரைபடத்தில் நாம் சந்தேகிக்கும் நபர்கள் எங்கிருக்கின்றனர் என்பதை எளிதில் கண்டறிய முடியும். புலனாய்வுப் பிரிவினர் முழு அளவில் கண்காணிப்பு நடவடிக்கைளை நாடு முழுவதும் முன்னெடுத்து வருகின்றனர். வைரஸ் தொற்று குறித்த தகவல்களை மறைக்கும் நபர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்- என்று தெரிவித்தார். (த)



# விமானங்களுக்கான தடை மேலும் நீடிப்பு!

கொழும்பு, மார்ச் 29

இலங்கைக்குள் பயணிகள் விமானங்கள் உள் நுழைவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீடிக்கப்பட்டுள்ளது என்று சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் தலைவர் உபுல் தர்மதாச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ள தாவது:

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதி வரை இந்தப் பயணத்தடை நீடிக்கப்பட்டுள்ளது. நாட்டில் கொரோனா வைரஸின் தாக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்கில், எதிர்வரும் 31 ஆம் திகதி வரை பயணிகள் விமானங்கள் உள்நுழைவதற்கு தடைவிதிக்கப்பட்டிருந்தது.

தற்போதைய நிலைமையை கருத்திற் கொண்டு, அதைத் தொடர்ந்தும் நீடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனினும், இலங்கையிலுள்ள வெளிநாட்டவர்களை அழைத்துச் செல்லல், சுற்றுலாப் பயணிகளை மீள அனுப்புதல் போன்ற நடவடிக்கைகளுக்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அவசர திசை திருப்பல்கள், சரக்கு விமான சேவைகளை முன்னெடுத்தல், தொழில்நுட்ப விடயங்களை கருத்திற் கொண்டு விமானங்களை தரையிறக்குதல் போன்ற நடவடிக்கைளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது-என்றார். (எ)

# மருதங்கேணியில் கஞ்சாவுடன் ஒருவர் கைது

மருதங்கேணி, மார்ச் 29

வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் கஞ்சா போதைப் பொருள் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் நேற்றுக்காலை ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இரகசியத் தகவலின் படி அந்த நபரைச் சோதனைக்கு உட்படுத்தியபோதே அவர் 7 பொதிகளில் கஞ்சா வைத்திருந்தார் என்பதைக் கண்டுபிடித்து கைது செய்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். (த-160)

# சமுர்த்திக் கொடுப்பனவில் அதிகாரிகளுடன் முரண்பாடு

## மக்களை வீட்டுக்கு விரட்டினர் பொலிஸார்

மட்டக்களப்பு, மார்ச் 29

மட்டக்களப்பு வாழைச்சேனையில் சமுர்த்திக் கொடுப்பனவு வழங்கலில் முறுகல் ஏற்பட்டதால்,பொலிஸார் அவர்களை வீடுகளுக்கு கலைத்தனர். வாழைச்சேனை பிரதேச செயலர் பிரிவிலுள்ள பேத்தாழை கிராம அலுவலர் அலுவலகத்திலேயே நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பயனாளிகளுக்கான முற்கொடுப்பனவான 5 ஆயிரம் ரூபா பணத்தை வழங்கிய போது, அதனைப் பெற்றுக் கொள்ள அதிகளவான மக்கள் அங்கு திரண்டனர். இதன்போது கடன் பெறும் பயனாளிகள் தெரிவில் சரியான நடைமுறை பின்பற்றப்படவில்லை என்று கூறி , கடன் பெற வந்தவர்கள் அதிகாரிகளுடன் களேபரத்தில் ஈடுபட்டார்கள்.

இதனையடுத்து, கல்குடா பொலிஸார் அங்கு வந்து, மக்களை உடனடியாக வீடுகளுக்குத் திரும்பிச் செல்லுமாறு விரட்டினர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-150)





இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 29.03.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.